# விபஸ்ஸனா செய்தி மடல்

## தமிழ் மாத இதழ்

(விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

மலர்: 3 ★ இதழ்: 3 ★ பங்குனி: 2024 ★ விலை: ₹ 2.50/- ★ ஆண்டு சந்தா : ₹ 30/-

## ஸயாஜி ஊ பா கின் அவர்கள் மீதான நன்றியுணர்வாக குருஜியின் பிறந்த நூற்றாண்டு

மதிப்பிற்குரிய பிக்குகளே, ஆசிரியர்களே, அறங்காவலர்களே மற்றும் தியானிகளே,

குருதேவர் திரு. சத்ய நாராயண கோயங்கா அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இன்று நாம் கூடியுள்ளோம். மிக முக்கியமான ஒரு சந்தர்ப்பம் நம் முன்னால் உள்ளது. குருஜியுடன் மிக நெருக்கமாகப் பணிபுரிந்து, அவரது நேரடி வழிகாட்டுதலின்படி தவத்தைப் பெற்று, பின்னர் தம்ம சேவையைத் தொடங்கி, இறுதியில் உதவி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டு இந்த தவத்தைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்ற தியானிகளுக்கு இது ஒரு சிறப்பு சந்தர்ப்பமாகும். இந்த தியானிகள் தொடக்கத்தில் மையமல்லாத இடங்களில் முகாம்கள் நடத்தியது முதல் நிரந்தர விபஸ்ஸனா மையத்தின் கட்டுமானம் மற்றும் பின்னர் உலகம் முழுவதும் பல தியான மையங்களை நிறுவுவது வரையிலான முழு முன்னேற்றத்தையும் கண்டனர். குழந்தைகள் முதல் சிறைச்சாலைகளில் உள்ள குற்றவாளிகள் வரை முகாம்களில் பல பங்கேற்பாளர்களின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றத்தையும் அவர்கள் அனுபவித்தனர். இந்த நேரத்தில், விபஸ்ஸனா ஆராய்ச்சி நிறுவனம் மூலம் பாலி திபிடகத்தை பர்மிய மற்றும் தேவநாகரி எழுத்துக்களில் இருந்து ரோமன் எழுத்துக்களுக்கு மொழிபெயர்க்கும் பணி நிறைவேற்றப்பட்டது, இகத்புரியில் ஸயாஜி ஊ பா கின் கிராமம் நிறுவப்பட்டது. உலகளாவிய விபஸ்ஸனா ஸ்தூபியை நிர்மாணிப்பதும், புத்தபெருமானின் நினைவுச்சின்னங்களை(அஸ்திகளை) அங்கே வைப்பதும், தியானம் செய்பவர்களுக்கும் ஒரு யதார்த்தமாக அமைந்தது. இது இனிமையான நினைவுகளை மீண்டும் கொண்டுவந்து, பல கடந்தகால தருணங்களை உயிர்ப்பிக்கிறது. ஒரு தியானம் செய்பவர் குருஜியை உடல்ரீதியாகப் பார்த்திருக்காவிட்டாலும், இன்றும் குருஜியின் அறிவுறுத்தல்களின்படி ஒவ்வொருவரும் தியானம் செய்கிறார்கள். மேலும் குருஜியின் சொற்பொழிவுகள் மூலம் அவர்கள் போதனைகளின் தத்துவார்த்த அம்சங்களைப் புரிந்துகொள்கிறார்கள்; எனவே, ஒவ்வொருவரும் அவர் மீது மிகுந்த மரியாதையையும் நன்றியையும் உணர்கிறார்கள்.

குருஜியின் ஏறக்குறைய 60 வருட வாழ்க்கை தர்மத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது. 1969-இல் அவர் இந்தியாவிற்கு வந்ததிலிருந்து, நிறைவேற்றப்பட்ட அனைத்து பெரிய தர்ம வேலைகளும் அடிப்படையில் தர்மத்தின் பயணமாகும். குருஜியின் மகத்தான பாரமிகள் அவரை இதற்கு சிறந்த பாத்திரமாக மாற்றியது. இத்தகைய இரக்கமுள்ள ஆசிரியரின் பிறந்த நூற்றாண்டு, தற்போதுள்ள மற்றும் வருங்கால சந்ததியினருக்கு அவர்களின் தனிப்பட்ட பயிற்சி மற்றும் தர்ம சேவையின் மூலம் தர்மத்தை வலுப்படுத்தவும் முதிர்ச்சியடையவும் உத்வேகம் மற்றும் வழிகாட்டுதலுக்கான ஒரு சந்தர்ப்பமாகும்.

*(1999 ஆம் ஆண்டு தம்மகிரியில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் திரு. ச. நா கோயங்கா அவர்களின் இறுதிக் குறிப்புகளிலிருந்து இந்தக் கட்டுரை எடுக்கப்பட்டது)*

என் அன்பான தம்ம தியானிகளே:

மீண்டும் இந்த வருடாந்தர கூட்டத்திற்கு நாம் கூடியுள்ளோம். கடந்த ஆண்டில் என்ன

செய்யப்பட்டது என்ற அறிக்கையை நான் கேட்டேன்; அது மிகவும் நிறைவாகவும், ஊக்கமளிப்பதாகவும் உள்ளது. வரும் ஆண்டில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதையும் குறித்துக்கொண்டேன். மிகுந்த கருணையுள்ளம் கொண்ட மாபெரும் இல்லறத் துறவியான ஸயாஜி ஊ பா கின் அவர்கள் பிறந்த நூற்றாண்டாக இருப்பதனால், இந்த ஆண்டு மிகவும் முக்கியமான ஆண்டாகும். அவரது நினைவாக நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

ஸயாஜியைப் போற்றும் நினைவுச் சின்னங்கள் பொருத்தமானவையாக இருந்தாலும், நீங்கள் ஒவ்வொருவரும் அவருக்கு ஒரு நினைவுச் சின்னமாக இருப்பது தான் அவருக்குச் செய்யும் மிகப் பெரிய அஞ்சலியாகும். “இதோ, ஒரு விபஸ்ஸனா தியானி ஸயாஜி ஊ பா கின் அவர்களின் பாரம்பரியத்தில் தம்மம் கற்றார். இது மக்களை எப்படி மாற்றுகிறது என்று பாருங்கள்!” என மற்றவர்கள் நினைக்கும் அளவுக்கு தம்மத்தில் உங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். அவருக்கு உங்களது நன்றியைக் காட்டவும், பாதையில் வந்து தங்களை விடுவித்துக் கொள்ள மக்களை ஊக்குவிக்கவும், உங்கள் சொந்த நலனுக்காகவும் இந்த முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

இந்த பாரம்பரியத்தில் இரண்டு முக்கியமான விஷயங்களை ஒவ்வொரு தியானியும் செய்ய வேண்டியுள்ளது. முதலில், தூய்மையான தர்மத்தில் நிலைபெற உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள். தூய்மையான தருமம் என்றால் என்ன என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ளுங்கள்: ஆரோக்கியமற்ற செயல்களில் இருந்து விலகுதல், ஆரோக்கியமான செயல்களைச் செய்தல் மற்றும் மனத்தின் மேற்பரப்பு மட்டுமல்லாமல், முழு மனதையும் தூய்மைப்படுத்துதல் – அவ்வளவு தான். முழு தருமமும் இந்த மூன்றில் அடங்கியுள்ளது. மேலும் சேர்க்க எதுவும் இல்லை, பரிபுண்ண, அதிலிருந்து எடுக்க எதுவும் இல்லை, பரிசுத்த. உங்களை தர்மத்தில் நிலைநிறுத்திக் கொள்ள உழைப்பதன் மூலம், நீங்கள் மற்றவர்களுக்கு நல்ல முன்மாதிரியாக திகழ்வீர்கள்.

இந்த துறவியின் உன்னதமான பணியை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது இரண்டாவது விஷயமாகும். எவ்வளவு வலிமையான தம்ம நோக்கம் அவருக்கு இருந்தது! இந்த விலைமதிப்பற்ற இரத்தினத்தை எந்த நாட்டிலிருந்து பெற்றோமோ அந்த நாட்டிற்கு நான் எனது நன்றிக்கடனை திருப்பிச் செலுத்த வேண்டும் என்றார். இந்தியாவின் நிலைமை குறித்த செய்தித்தாள் அறிக்கைகளைப் பற்றி அவர் விவாதித்தபோது, அவர் எவ்வளவு இரக்கமுள்ளவர் என்பதைக் கண்டோம். “புத்தர்கள் எழுந்தருளும், தூய தம்மம் எழும் அந்த நாட்டில் என்ன நடக்கிறது? மதத்தின் பெயரால் மக்கள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள்! மதக்கலவரம், இனக்கலவரம், சாதிய முரண்பாடுகள் உள்ளன. இந்த அற்புதமான தர்மத்தை அவர்கள் பெற்றால், முழு நாடும் துன்பத்திலிருந்து வெளியேறும். வேறு வழியில்லை. இந்த மோதல்கள் இருக்கும் வரை, துன்பங்களைத் தவிர வேறொன்றும் இருக்காது, தூய்மையான தர்மம் நாடு பெற்றால் மட்டுமே அவற்றை ஒழிக்க முடியும்.” என்று அவர் கூறினார்,

மிகுந்த ஆர்வத்துடன், "நான் சென்று இந்த உன்னதமான கடமையைச் செய்ய வேண்டும்" என்று அவர் கூறினார். அவரால் வர முடியவில்லை. நான் வந்ததும், அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார், "இதோ, இப்போது என் தம்ம மகன் என் பிரதிநிதியாக அங்கு தம்மத்தைப் பரப்புவார். அதில் அவர் நிச்சயம் வெற்றி பெறுவார். அவர் என்னிடம், "நீங்கள் வெற்றி பெறுவீர்கள், கவலைப்பட வேண்டாம், நீங்கள் வெற்றி பெறுவீர்கள்." என்று தொடர்ந்து சொன்னார். நான் பயந்துகொண்டு, "இந்தியாவில் விபஸ்ஸனாவை யார் ஏற்றுக்கொள்வார்கள்? என்னை அங்கு யாருக்கும் தெரியாது" என்றேன். அதற்கு ஸயாஜி, "கவலைப்படாதே. காலம் கனிந்து விட்டது. அங்கே நல்ல பாரமிகளுடன் (தம்மத்திற்கான நற்பண்புகள்) மக்கள் இருக்கிறார்கள். தானாக வருவார்கள். "விபஸ்ஸனா" என்று கேட்டவுடனே அவர்களால் எதிர்க்க முடியாது, அவர்கள் நிச்சயம் வருவார்கள், கவலைப்பட வேண்டாம். மேலும் இந்த நாடு ஒருமுறை தர்மத்தை ஏற்க ஆரம்பித்துவிட்டால், பிறகு காட்டுத்தீ போல், தம்மத்தின் பிறப்பிடமான இந்தியாவில் இருந்து உலகம் முழுவதும் பரவும். முன்பு இந்த நாட்டில் இருந்து தான் பரவியது. இப்போது மீண்டும் காலம் கனிந்துள்ளது. இந்த நாட்டிலிருந்து தான் அது பரவும், இப்போது காலம் கனிந்துவிட்டது. விபஸ்ஸனாவின் மணியோசை அடித்துவிட்டது.

நான் வெற்றியடைவேனா என்று எனக்கு இன்னும் சந்தேகம் இருந்தது, ஆனால் எப்படியோ, நான் இந்த நாட்டிற்கு வந்த ஒரு மாதத்திற்குள், முதல் முகாம் கொடுக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக, தம்மத்தின் கங்கை ஓடத் தொடங்கியது. எனவே, தம்மம் அதன் பிறப்பிடமான இந்த நாட்டில் மீண்டும் நிறுவப்பட வேண்டும் என்பதும், அதன் பிறகு, தருமம் உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்பதுவுமே அவரது நோக்கமாகும்.

எங்கும் துன்பம் நிறைந்துள்ளது. எல்லா இடங்களிலும் மக்கள் துன்புறுகின்றனர். உதாரணமாக, எதிர்மறை உணர்வுகள் நிறைந்த, மிகக் குறுகிய மனப்பான்மை கொண்ட ஒரு நபர், அறிவுசார் மட்டத்தில், "ஓ, இது எனக்கு நல்லதல்ல. நான் என்னைத் துன்பப்படுத்துகிறேன். நான் மற்றவர்களை துன்பப்படுத்துகிறேன். நான் அதிலிருந்து வெளியே வர விரும்புகிறேன்." என்று புரிந்துகொள்கிறார். ஆனால் அதிலிருந்து வெளிவர அவர்களிடம் வழி இல்லை. போதை பழக்கத்திற்கு அடிமையான ஒருவர், “இது எனக்கு நல்லதல்ல. நான் அதிலிருந்து வெளியே வர விரும்புகிறேன்.” என்று நன்றாக புரிந்துகொள்கிறார். எந்தவொரு தீய செயலில் ஈடுபடும் எவரும் மிகவும் மகிழ்ச்சியற்றவர்களாக இருக்கின்றனர். தங்கள் வாழ்க்கையைத் தீமையிலிருந்து நல்லொழுக்கத்திற்கு மாற்ற விரும்புகிறார்கள்; ஆனால் எப்படி?

கண்மூடித்தனமான நம்பிக்கையோ அல்லது கோட்பாட்டையோ சார்ந்து இல்லாத ஒரு வழி இருப்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். விபஸ்ஸனா விஞ்ஞானம், பகுத்தறிவு மற்றும் நடைமுறை சார்ந்தது. அது இங்கேயே இப்போதே முடிவுகளைத் தருகின்றது. நீங்கள் அதில் முயற்சி செய்தால், விளைவுகளைப் பெறுவீர்கள். பின்னர் இயற்கையாகவே, நீங்கள் அதில் நம்பிக்கையுடன் இருப்பீர்கள். படிப்படியாக, நீங்கள் இறுதி இலக்கை அடைவீர்கள். அதற்கு ஒருமுறை வாய்ப்பளியுங்கள். இது தான் விடுதலைப் பாதை என்று நாங்கள் கூறுகிறோம்; அதற்காக நீங்கள் அதனை ஏற்க வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளாதீர்கள். அதற்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். "உங்கள் வாழ்வின் ஏழு நாட்களை எனக்கு கொடுங்கள்." என்று புத்தர் கூறியதுபோல், “உங்களது வாழ்நாளில் எனக்கு பத்து நாட்கள் கொடுங்கள்” என்று நாங்களும் கூறுகிறோம். அதற்கான ஒரு வாய்ப்பு அளியுங்கள். நல்ல பலன் கிடைத்தால் ஏற்றுக்கொள்ளுங்கள்.

கோயங்காவின் சீடர்களோ அல்லது ஊ பா கின் அவர்களின் சீடர்களோ என்று தங்களை அழைத்துக் கொள்ளும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் எங்களுக்கு ஆர்வம் இல்லை. அது அர்த்தமற்றது! நபர்களின் எண்ணிக்கையை எண்ணுவது அர்த்தமற்றது. இந்த மரபிலிருந்தோ அந்த மரபிலிருந்தோ மக்களைப் பறிப்பதில் எங்களுக்கு அக்கறை இல்லை. அதுவும் அர்த்தமற்றது! நமக்கு அதில் என்ன கிடைக்கும்? துன்பத்திலிருந்து வெளியே வர வேண்டும் என்பது அனைவரின் உலகளாவிய விருப்பமாக உள்ளது. இந்த விருப்பத்தை நிறைவேற்ற நாங்கள் அவர்களுக்கு உதவுகிறோம். “இதோ ஒரு வழி உள்ளது. அது நன்றாக இருப்பதாக நீங்கள் கண்டால், அதை ஏற்றுக்கொள்ளுங்கள். அது நல்லது என்று நீங்கள் காணவில்லை என்றால், அதை ஏற்றுக்கொள்ளாதீர்கள். ஒரு வாய்ப்பு கொடுங்கள்.” அவ்வளவுதான்.

ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட மதத்தை நிறுவ நாங்கள் இங்கு வரவில்லை. தம்மம் ஒழுங்கமைக்கப்பட்ட மதங்களிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. தம்மம் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட மதமாக மாறும் தருணத்தில், தம்மம் இழக்கப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்ட மதம் மேலோங்கி நிற்கிறது. அதனால் எங்களுக்கு அதில் ஆர்வம் இல்லை. தூய்மையான தர்மம் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட மதமாக மாறாமல் இருக்க மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பதை விபஸ்ஸனாவின் ஒவ்வொரு மாணவரும் புரிந்து கொள்ள வேண்டும். அனைவரும் உழைக்க வேண்டும். நீங்கள் முயற்சி செய்கிறீர்கள், பலன் கிடைக்கும். “நீங்கள் மிகவும் பலவீனமாக இருக்கிறீர்கள். உங்களை நீங்களே எப்படி விடுவித்துக்கொள்ள முடியும்? என்னிடம் வாருங்கள். என்னிடம் சரணடையுங்கள். என்னிடத்தில் அடைக்கலம் புகுங்கள். நான் உங்களை விடுவிப்பேன். விடுதலை என் பையில் உள்ளது. நான் அதனை உங்களுக்கு தருகிறேன்” என்று ஒரு ஆசிரியர் கூறுவதுபோல் ஒருபோதும் நிகழக்கூடாது. அந்த மாதிரியான காரியம் தர்மத்தில் நடக்கவே கூடாது. இப்போதும், எதிர்காலத்திலும் அவ்வாறு நிகழவே கூடாது; இல்லையெனில்,

தம்மம் இழக்கப்படும். அனைவரும் உழைக்க வேண்டும். சரிவர பயிற்சி செய்யுங்கள், நீங்கள் பலனைப் பெறுவீர்கள். நீங்கள் சரியாக வேலை செய்யவில்லை என்றால், எந்தவித பலனும் கிடைக்காது.

எனவே மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், மக்கள் தங்கள் துயரத்திலிருந்து வெளியே வருவதற்கு ஒரு வழி இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஒரு வாய்ப்பை அளிக்க ஒப்புக்கொண்ட பின்னர், அடுத்த முக்கியமான விஷயம் என்னவெனில், திறனுள்ள ஒருவர் இந்த நபர் பாதையில் முன்னேறுவதை பார்த்துக்கொள்வதாகும். அதற்கு, என்னென்ன வசதிகள் தேவை? நாங்கள் உங்களுக்கு எப்படி உதவ முடியும்? இந்த நபரை நாம் எவ்வாறு ஊக்குவிக்க முடியும்? ஒருவர் தன்னால் முடிந்ததைச் செய்யத் தொடங்குகிறார். இதனால் அதிகமான மக்கள் தங்கள் துயரத்திலிருந்து வெளியே வருவார்கள். பஹுஜன-ஹிதாய, பஹுஜன-ஸுகாய: இதுவே குறிக்கோள், வேறு இல்லை. மேலும் மேலும் மக்கள் தர்மத்தின் பலனைப் பெற வேண்டும், அமைதியும் நல்லிணக்கமும் பெற வேண்டும், துன்பத்திலிருந்து வெளியே வர வேண்டும். அவ்வளவு தான்.

நாம் மதப் பிரிவினைவாதிகளின் ஒரு குழுவாக மாறக்கூடாது. எதிர்காலத்தில் ஒரு விபஸ்ஸனா தியானியின் மகனோ அல்லது பேரனோ, "நான் விபஸ்ஸி குடும்பத்தில் பிறந்ததால் நான் ஒரு விபஸ்ஸீ ஆவேன்" என்று கூறலாம். அதனால், விபஸ்ஸீ ஜாதி தொடங்கும் அபாயமும் உள்ளது. விபஸ்ஸனா பயிற்சி இல்லாமல் அல்லது அது என்னவென்று தெரியாமல், மக்கள் "விபஸ்ஸீ" என்று அழைக்கப்படுவார்கள். இது பெரிய ஆபத்து; இனிமேலாவது கவனமாக இருக்க வேண்டும். புரிந்து கொள்ளுங்கள், உண்மையில் விபஸ்ஸனா பயிற்சி இல்லாமல், எந்த பலனும் இல்லை. நீங்கள் தீவிரமாக முயற்சி செய்வதன் மூலம் மற்றவர்களையும் பயிற்சி செய்ய ஊக்குவியுங்கள். இந்த தூயவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடனை இப்படித்தான் திருப்பிச் செலுத்த முடியும்.

மற்றொரு மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த அற்புதமான பயிற்சிமுறை இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கிலும், எல்லா இடங்களிலும், பௌத்த நாடுகள் என்று அழைக்கப்படுபவற்றிலும் கூட இழந்துவிட்டது. இப்போது நாங்கள் அங்கு சென்று முகாம்களை வழங்கும்போது, விபஸ்ஸனாவைப் பற்றிய சொற்கள் மட்டுமே இருப்பதைக் காண்கிறோம். உண்மையான பயிற்சி, தூய பயிற்சிமுறை, தொலைந்துபோனது. அதனால்தான் அவர்கள் அதைப் பெறுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றனர்.

இப்போது நேரம் வந்துவிட்டது. விபஸ்ஸனா மீண்டும் வந்துகொண்டிருக்கிறது. அது நீண்ட காலமாக மக்களுக்கு சேவையாற்றுவதை நாம் பார்க்க வேண்டும். பயிற்சியின் தூய்மையைப் பேணும்போது மட்டுமே அது மக்களுக்குச் சேவை செய்யும். கலப்படம் ஏதேனும் இருப்பின், அதன் செயல்திறன் போய்விடும். பயிற்சியின் செயல்திறன் போய்விட்டால், மக்கள் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு செய்ததைப் போல அவர்கள் அதை இழக்க நேரிடும். இதில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இந்த தூயவரிடமிருந்து நாம் எதைப் பெற்றிருந்தாலும், இப்பாரம்பரியத்திலிருந்து அவர் எதைப் பெற்றிருந்தாலும், அதன் தொன்மைத் தூய்மையைப் நாம் பேணிக் காக்க வேண்டும். சேர்த்தல் ஏதும் இல்லை; நாங்கள் அதில் எதையும் சேர்க்க மாட்டோம். கேவலங் பரிபுண்ணங், அது முழுமையானது. மொத்த தர்மம் அதில் உள்ளது. வேறு என்ன சேர்க்க வேண்டும்? கேவலங் பரிசுத்தங், முழு தூய்மை. கழிக்க வேண்டியது ஏதும் இல்லை; அதிலிருந்து எதையும் எடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை.

தலைமுறை தலைமுறையாக நாம் அதை பராமரித்தால், இந்த துன்பகரமான உலகில் ஏராளமான மக்கள் துன்பத்திலிருந்து வெளியே வரத் தொடங்குவார்கள். இதுவே இந்த தூயவரின் பணியாக இருந்தது; அவர் விரும்பியதும் இதுதான். இப்போது நேரம் வந்துவிட்டது. விபஸ்ஸனாவின் மணியோசை ஒலித்துவிட்டது. அது தொடங்கும், ஆனால் அதற்கு யாராவது ஏதாவது செய்ய வேண்டும். இது ஒரு அதிசயமாக தொடங்காது. அதற்கு யாராவது உழைத்தாக வேண்டும். யாராவது அதன் தூய்மையை பராமரிக்க வேண்டும்.

நாம் இங்கு நடத்தும் இந்த ஆண்டு மாநாட்டில், இந்த சில குறிப்புகள் மிக முக்கியமானதாக இருக்க வேண்டும்: இந்த தூயவருக்கு உண்மையான மரியாதை செலுத்தவும், நமது நன்றியைக்

காட்டவும், நாம் தர்மத்தில் நம்மை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில், நீங்கள் மற்றவர்களை ஊக்குவிக்கவோ அல்லது மற்றவர்களுக்கு உதவவோ முடியாது. பார்வையற்றவர் மற்றொரு பார்வையற்றவருக்கு உதவ முடியாது. நாம் முதலில் நம்மைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும், பின்னர், பல்வேறு வழிகளில், உலகில் துன்பப்படும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள், "இதோ, ஒரு பாதை இருக்கிறது. பலன்களைத் தரும் ஒரு பாதை உள்ளது." என்ற செய்தியை பெறுமாறு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும், கடந்த முப்பது ஆண்டுகளில் இத்தகைய நேர்மறையான விளைவுகள் ஏற்கனவே எட்டப்பட்டுள்ளன. ஒரு பாதை பலன்களைத் தருகிறது, அது மதச்சார்பற்றது மற்றும் ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறுவதை உள்ளடக்காது என்று மக்கள் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். இது ஒரு மனப் பயிற்சி மட்டுமே. நீங்கள் உடற்பயிற்சி செய்யும் போது, ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு உங்களை மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை. இதேபோல், இதுவும் ஒரு மனப் பயிற்சியாகும். இங்கு நீங்கள் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட மதத்திலிருந்து மற்றொரு ஒழுங்கமைக்கப்பட்ட மதத்திற்கு மாற வேண்டிய அவசியமில்லை; உங்கள் பெயரை இதிலிருந்து அதற்கு மாற்ற தேவையில்லை. நீங்கள் ஒரு நோய்வாய்ப்பட்ட நபர். நோயிலிருந்து வெளியே வர மருந்து தேவைப்படுகிறது. இதோ அந்த மருந்து. இந்த மருந்தை சாப்பிட்டு விட்டு வெளியே வாருங்கள். இதுபோன்ற தகவல் மக்களிடையே சேர வேண்டும்.

இந்த மாநாட்டில் நீங்கள் ஒவ்வொருவரும், "விபஸ்ஸனாவைப் பற்றி மேலும் மேலும் மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில், எனது திறன், எனது புத்திசாலித்தனம் மற்றும் எனது வலிமையை நான் எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்த முடியும்?" என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். இரண்டாவதாக, "இந்த பயிற்சியைப் பயன்படுத்த விரும்புவோருக்கு நாம் எவ்வாறு உதவலாம்? எனது திறனுக்கு ஏற்ப, எனது சக்திக்கு ஏற்ப, அதிகமான மக்கள் இந்த பயிற்சிமுறையைப் பயன்படுத்திக்கொள்ள நான் என்ன செய்ய முடியும்? இந்த பயிற்சிமுறையில் மேலும் மேலும் மக்கள் நிலைபெற நான் என்ன செய்ய முடியும்?" என்றும் சிந்திக்க வேண்டும். மூன்றாவது விஷயம் என்னவென்றால், "நான் ஒருபோதும் பயிற்சியின் தூய்மையைக் கெடுக்க மாட்டேன்; முடிந்தவரை, நான் யாரையும் அவ்வாறு செய்ய அனுமதிக்கவும் மாட்டேன், ஊக்குவிக்கவும் மாட்டேன்; இந்த நுட்பத்தின் தூய்மையைக் கெடுக்கும் எவரையும் ஆதரிக்க மாட்டேன்." என்று தீர்மானம் எடுக்க வேண்டும்.

இந்த தீர்மானங்களை நீங்கள் கொண்டு சென்றால் நமது மாநாடு வெற்றி அடையும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. உங்களுக்கு உதவ தம்மம் உள்ளது. தம்மம் இது வரை உதவி செய்து வருகிறது, அது உங்களுக்கு தொடர்ந்து உதவும். ஆனால் எவரால் நீங்கள் தர்மத்தைப் பெற்றீர்களோ, அந்த தூயவருக்கு நன்றிக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு உங்களிடமிருந்து ஒரு வலுவான உறுதி தேவைப்படுகிறது,

புத்தர் மீது நாம் நன்றியுணர்வைப் பெற்றிருப்பதால், "எண்ணற்ற வாழ்க்கையில் அவர் தனது முக்திக்கான நற்குணங்களை (பாரமீகளை) வளர்த்துக் கொள்ள கடினமாக உழைக்காமல் இருந்திருந்தால், இந்த அற்புதமான பாதையை அவர் கண்டுபிடித்திருக்க மாட்டார். இந்த அற்புதமான மார்க்கத்தை அவர் கண்டுபிடிக்கவில்லை என்றால், நான் எப்படி அதைப்பெற்றிருப்பேன்?" என்ற உணர்வு எழுகிறது. எனவே புத்தர் மீது ஆழ்ந்த நன்றியுணர்வும், தூய்மையைப் பேணிய பாரம்பரியத்தின் மீது ஆழ்ந்த நன்றியுணர்வும், இந்த வலுவான தம்ம விருப்பத்தைக் கொண்டிருந்த ஸயாஜி ஊ பா கின் அவர்கள் மீது ஆழ்ந்த நன்றியுணர்வும் ஏற்படுகிறது. இப்போது காலம் கனிந்துவிட்டது. தம்மம் நிச்சயம் பரவும். அது பரவ வேண்டும். அவருடைய உன்னத விருப்பத்தை நிறைவேற்ற, நமக்குள் சாத்தியமான அனைத்தையும், நம் சொந்த நலனுக்காக மட்டுமல்ல, மற்ற அனைவரின் நன்மைக்காகவும் செய்வோம்.

உலகம் முழுவதும் ஏராளமான மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். தூய்மையான தர்மம் உலகம் முழுவதும் பரவட்டும். மேலும் மேலும் துன்புறும் மக்கள் தர்மத்துடன் தொடர்பு கொண்டு, தர்மத்தை வாழ்க்கையில் கடைப்பிடித்து, அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறட்டும்.

பவது ஸப்ப மங்கலங், பவது ஸப்ப மங்கலங், பவது ஸப்ப மங்கலங். ●